திருமயம் தொகுதியில் வேளாண்மைக்கு ஏற்ற காட்டுப் பகுதிகள்.

* 728 வினா—**புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருமயம் தொகுதியிலுள்ள காட்டுப் பகுதிகளிலிருந்து வேளாண்மை செய்வதற்கேற்ற பகுதிகள் பகுக்கப்பட்டு வருவாய் துறைக்கு மாற்றப்பட்டுள்ளனவா ?

(இ) ஆமெனில், எங்கெங்கு ?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : (அ) & (இ) திருமயம் வட்டத்தில் மேலப்பனையூர் கிராமத்தில் உள்ள சுமார் 80 ஏக்கர் காட்டு நிலத்தை வருவாய்த் துறைக்கு மாற்றுவது பற்றிய செயற்குறிப்பு ஒன்று வனத் துறைத் தலைவரிடமும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியாளரிடமும் இருக்கின்றது. அது அவர்களால் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

புலவர் பொ. பொன்னம்பலம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேலப்பனையூர் கிராமத்தில் உள்ள காட்டு நிலங்களை வருவாய்த் துறைக்கு மாற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நச்சாம்தொட்டி, ராங்கியம் பகுதிகளில் உள்ள காட்டுப் பகுதிகளையும் வருவாய்த் துறைக்கு மாற்றுவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்பொழுதுள்ள செயற்குறிப்பு 80 ஏக்கர் நிலத்தை வருவாய்த் துறைக்கு மாற்றுவதற்கு பரிசீலனை செய்யப்படுகிறது. திருமயத்தில் உள்ள ஏனைய பகுதிகளைப் பொறுத்த வரையில் காட்டிலாகா 4-வது சட்டத்தின் கீழ் மாற்றுவதற்கு விளம்பரப் படுத்தப்பட்டிருக்கிறது. அதற்காக அறிவிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

வாழ்க்கைத் தரப் புள்ளி.

*729 வினா—**திரு ஏ. எம். இராஜா :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

சேலம், கோவை, கடலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, நாகர்கோவில், முதலிய நகரங்களில் வாழ்க்கைத் தரப் புள்ளி எண் கடந்த ஆறு மாதங்களில் முறையே எவ்வளவு புள்ளிகள் உயர்ந்துள்ளன, அல்லது இறங்கி உள்ளது ?

மாண்புமிகு திரு கா. வேழவேந்தன்: கடலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், நாகர்கோவில், ஆகிய இடங்களில் 1969 ஜூன் முதல் நவம்பர் மாதம் வரை உள்ள வாழ்க்கைச் செலவுப் புள்ளி விவரங்களைக் காண்பிக்கும் விவர அறிக்கை @ ஒன்று சட்டமன்றப் பேரவையின் முன்வைக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூருக்கான புள்ளி சேலத்திற்கும் பொருந்தும்.

Dr. H. V. HANDE : Sometime back I had asked a question whether cost of living reports have been published for the month of March especially for the City of Madras. In view of the fact that there is necessity for this cost of living index to give bonus to workers and employees, even white-collared employees, may I know whether it has been released and if so, whether there has been exorbitant increasein the cost of living in the month of March ? முற்பகல் 9-30

@ 638-639ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. கா. வேழவேந்தன் : இந்த அவையில் முன்பே சொல்லப்பட்டது. சில வாரங்களாக காஸ்ட் ஆப் லிவிங் இன்டெக்ஸ் விவரங்கள் வெளியிடப்படாமல் இருந்தன. மத்திய அரசிடம் சென்னை நகரிலுள்ள அரிசியின் விலையைப் பற்றி ஸப்ஸிடைஸ்டு ரேட் என்று சொல்லப்படுகிற நாம் தருகிற மலிவு விலையில் கணக்கிடுவதா அல்லது வெளி மார்க்கெட்டில் உள்ளபடி கணக்கிடுவதா என்பதைப் பற்றிய விவரத்தை அறிவதற்காக மத்திய அரசிடம் தொடர்பு கொள்ள வேண்டியிருந்த காரணத்தால் தடை ஏற்பட்டது. விரைவில் அதை வெளியிடுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. எம். பூபதி : அமைச்சர் அவர்கள் கூறிய பதிலின் அடிப்படையில் கடலூர், திருச்சி, மதுரை, கோவை, நாகர்கோவில் இவற்றின் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்தப் புள்ளி விவரங்களை விடக் குறைந்த வாழ்க்கைப் புள்ளிதான் சென்னையில் உள்ளது. ஆகவே, மாவட்ட வாரியாகக் கொடுக்காமல் வாழ்க்கைப் புள்ளி அடிப்படையில் இனிமேல் பஞ்சப்படியைக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு கா. வேழவேந்தன் : எங்கள் புள்ளி விவரத் துறையைப் பொறுத்த வரையில் இருக்கிற புள்ளி விவரத்தைச் சேகரித்து அதன் விவரங்களை இங்கே கொடுத்திருக்கிறோம். இதையொட்டித்தான் பஞ்சப்படி எல்லாம் கொடுக்கப்பட வேண்டும் என்பது விதி. அப்படித் தான் வழங்கப்படும்.

அனாதைக் குழந்தைகள் இல்லங்கள்.

***730 வினா—திரு என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இம் மாநிலத்தில் எத்தனை அனாதைக் குழந்தைகள் விடுதிகளுக்கு அரசு உதவியளித்து வருகின்றது ? அவைகள் யாவை ?

(இ) ஆண்டொன்றுக்கு இதற்காக எவ்வளவு செலவழிக்கப்படுகிறது ?

(உ) ஒரு குழந்தைக்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு கா. வேழவேந்தன் : (அ) குழந்தைகள் இல்லங்கள் 355-ன் பெயர்கள் அடங்கிய பட்டியல் @சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்பட்டுள்ளது.

(இ) ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 38·50 லட்சம் வீதம் அனாதைக் குழந்தை இல்லங்களுக்கு அரசு உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது.

(உ) மலைப் பிரதேசங்களில் நடக்கும் இல்லங்களில் பயிலும் குழந்தை ஒவ்வொன்றுக்கும் மாதம் ரூ. 15 வீதமும், சமவெளியில் நடக்கும் இல்லங்களில் பயிலும் குழந்தை ஒவ்வொன்றுக்கும் மாதம் ரூ. 12 வீதமும் தரப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : தமிழ்நாட்டில் அனாதைக் குழந்தைகளின், எண்ணிக்கையைக் கணிசமான அளவில் குறைத்திட அதன் மூல காரணத்தை அறிந்து அத்தகைய நிலை ஏற்படாமல் இருக்க அரசாங்கம் மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கைகள் என்ன என்பதை விளக்க இயலுமா ?

மாபுண்மிகு திரு. கா. வேழவேந்தன் : வளர்ந்துவருகிற குழந்தைப் பெருக்கத்தின் வேகத்தில் இதைத் தடுக்க முடியுமா என்பது உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும் இங்கு இந்தப் பட்டியலில் நீளம் அதிகமாகிக் கொண்டே போகிறது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது.

@ 639–649ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.